நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
சேப்பாக்கம், சென்னை–5

ந.க.எண்.60813/2008/இ3

நாள். 19.11.2009

சுற்றறிக்கை

பொருள்: ஆய்வு–நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் கல்வி நிதியின் கீழ் பள்ளி கட்டிடப் பணிகள் நடைபெறுவது (ம) உள்ளாட்சிப் பகுதிக்குள் அமைந்திருக்கும் பள்ளிகளின் மேம்பாட்டிற்காக செலவு செய்வது சம்பந்தமாக அறிவுரை–வழங்கப்படுகிறது.

-----

தற்போது மாநகராட்சி மற்றும் நகராட்சிகளால் நடத்தப்படும் ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான இதர வசதிகள், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளால் வசூலிக்கப்படும் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது.

1 1 முதல் 5 வகுப்புகளுக்கு தற்பொழுதுள்ள புதிய செயல்முறை கல்விப் பாடத்திட்டத்தின்படி ஆசிரியர்களும் மாளவர்களும் வகுப்பு அறையில் அமர்ந்து பாடம் பயில வேண்டும். எனவே 1 முதல் 5 வகுப்புகளுக்கு வகுப்பு அறைகளின் தரைப்பகுதியில் டைல்ஸ் பதிக்க வேண்டும்.

2 மேலும் மாணவர்கள் அமருவதற்கு சிறு நாற்காலிகள் வாங்கி கொடுக்க வேண்டும் அதற்கு நிதி வசதி இல்லாத பட்சத்தில் குறைந்தபட்சம் பாய்கள் ( Mats ) வாங்கிக் கொடுக்க வேண்டும்.

3 மேலும் இந்த வகுப்பு அறைகளில், மாணவர்கள் எழுதிப் பார்ப்பதற்கு நான்குபுறச் சுவர்களிலும் 3 அடி உயரத்தில் கரும்பலகை(Black Board) அமைத்து கொடுக்க வேண்டும்.

4 நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் தலைமையாசிரியருக்கு தனி அறை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

5 உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியைகளுக்கு வகுப்பில்லாத நேரங்களில் தங்குவதற்கு தனி அறைகள் கழிப்பிட வசதியுடன் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

6 முதல் தளம் மற்றும் இதற்கு மேற்பட்ட தளங்களில் (Floor)வகுப்பறைகள் கட்டப்பட்டு இருந்தால், இந்த கட்டிடங்களின் வராண்டா கைப்பிடிச் சுவர்களின் மீது மாணவர்களின் பாதுகாப்புக் கருதி Hand Drills பொருத்தப்பட வேண்டும்.

7 மாணவர்கள் மதிய உணவு உட்கொண்ட பின்பு கை கழுவ மற்றும் பாத்திரங்கள் சுத்தப்படுத்த திருமண மண்டபங்களில் இருப்பது போல குழாய் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

8 அனைத்து வகுப்பறைகளிலும் மாணவர்கள் அமர்வதற்கு பெஞ்ச் மற்றும் டெஸ்க் போன்ற தளவாடச் சாமான்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். நிதிவசதி குறைவாக உள்ள இடங்களில் 12ஆம் வகுப்பிலிருந்து படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் புதிய தளவாட சாமான்கள் ஏற்படுத்தி மாணவர்களுக்கு வசதி செய்து தர வேண்டும்.

9 ஒரு நகராட்சியில் அல்லது மாநகராட்சியில் உள்ள அனைத்துப் பள்ளிக் கட்டிடங்களும் ஒரே வர்ணம் தேர்வு செய்து colour washing செய்யலாம்.

10 பள்ளிகளில் இயங்கி வரும் சத்துணவு மைய சமையல் அறைகளுக்கு குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். மேலும் புகை வெளியேறுவதற்கு காற்று வெளியேற்றும் மின் விசிறி (Exhaust Fan) பொருத்தலாம்.

11 +2 தேர்வில் நகராட்சிப் பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் 25 Rank பெற்ற மாணவர்களுக்கு மேற்படிப்பிற்காக அரசு வழங்கும் உதவித் தொகை குறித்த தகவல் தெரிவித்து அனைத்து உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் நுழைவு வாயில் அல்லது தலைமையாசிரியர் அறையின் முன்புறம் விளம்பரப் பலகை வைக்க ஏற்பாடு செய்யலாம். ஏனென்றால் ஆய்வின் போது சில பள்ளிகளில் இந்த உதவித் தொகை குறித்த தகவல் மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் தெரியவில்லை.

12 தற்பொழுது பள்ளிகளில் புதியதாக கட்டப்பட்டுள்ள கழிப்பிடங்களை சுத்தம் செய்வதற்கு, Jet Nostril மற்றும் Pressure Pump பொருத்தியும் கருவி அமைத்துக் கொடுக்கலாம்.

13 எல்லா பள்ளிகளிலும் சுற்றுச் சுவர் உயர்த்தி அதன் மீது முள்வேலி கம்பி அமைத்துக் கொடுக்கலாம்.

14 பள்ளிக்குத் தேவையான குறைந்தபட்ச வசதிகளை, வகுப்பறைகள், கழிப்பறை குடிநீர் வசதி, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்கு பரிசோதனை கூடங்கள் மற்றும் நூலகம் போன்றவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும்படி நகராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

15 பள்ளி நுழைவு வாயிலிருந்து வகுப்பு அறைக்கு செல்லும் வரை தேவையான இடங்களில் சிமெண்ட் தரை அல்லது சிமெண்ட் பிளாக்குகள் அமைக்க வேண்டும்.

16 பள்ளி வளாகத்தில் அந்தந்த ஊர்களில் நன்றாக வளரும் (வேம்பு, புங்க மரம், ஆலமரம் போன்ற) மரக்கன்றுகள் அமைக்க வேண்டும். மேலும் தண்ணீர் அதிகம் தேவைப்படாத காகிதப்பூ போன்ற மலர்ச்செடிகள் அமைக்க வேண்டும்.

17 சரியான பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத ஒவ்வொரு பள்ளிக்கும் மின் Reverse Osmosis Plant அமைத்து குடிநீர் வழங்க வேண்டும்.

18 'Norms 'படி போதிய வகுப்பறைகள்

19 போதிய மாணவர் கழிப்பிடங்களும், ஆண்/பெண் தனியே மற்றும் உடல் ஊனமுற்ற (Handicapped) மாணவர்களுக்குச் சிறப்பு வசதிகள்.

20 விளையாட்டு மைதானங்கள், ( தனி மற்றும் பொது) விளையாட்டுக் கருவிகள்.

21 தேவையான அறிவியல் கூடங்கள் (Science Lab) மற்றும் அதற்கான உபகரணங்கள்

22 பெரிய பள்ளிக்கூடங்களில் Central Broad casting Equipments. (தலைமை ஆசிரியர் அறையிலிருந்து மாணவர்களை அவர்களது அறைகளிலேயே தொடர்பு கொள்ள வசதியாக)

23 தேவையான கணினிகளும் அவற்றிற்கான உபகரணங்கள்.

24 சிறந்த நூலகங்கள் (கட்டிடம், நூல்கள் படிப்பறை, புத்தகங்கள் உள்பட)

25 மிதிவண்டி நிறுத்துமிடம்.

26 பெரிய பள்ளிகளில் அசெம்ளி கூடங்கள் (Assembly Halls)

27 தேவையான இடங்களில் மாணவர்களிடையே Multimedia presentation செய்வதற்காக Video Equipments, projectors வசதிகள்.

28 மழைநீர் சேகரிப்பு வசதிகள்

29 இடி, மின்னல் தவிர்க்கும் கருவிகள்.

30 தீயணைப்பு பாதுகாப்பு உபகரணங்கள் ( Fire Safety Equipments)

31 எச்சரிக்கை சங்கொலி (Emergency Sirens)

32 Solar Energy system to the extent needed.

33 நகராட்சி நிர்வாக மண்டலப் பொறியாளர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தங்களுடைய ஆய்வின்பொழுது மேற்கூறிய பணிகள் ஆய்வு மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/ப.செந்தில்குமார்
நகராட்சி நிர்வாக இயக்குநர்.

பெறுநர்

1. அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையர்கள்
2. அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
3. அனைத்து நகராட்சிப் பொறியாளர்கள்

நகல்

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மேஜைக்கு.
2. அனைத்து அலுவலர்கள் நகராட்சி நிர்வாக இயக்ககம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,இணையதளம்(ITS)
4. இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக